www.em.tnschools.co.in

11 T1

**கன்னியாகுமரி மாவட்டப் பொதுத் தேர்வுகள்**

**காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2013**

-----

**வகுப்பு 11**

காலம்: 3.00 மணி | **தமிழ் முதல் தாள்** | மதிப்பெண்கள்: 100

**(செய்யுளும், இலக்கணமும்)**

குறிப்பு : ***1) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நன ஆய அமைதல் வேண்டும்.***

***2) வினா எண் VI - க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வே டும்.***

**I. *பின்வரும் வினாக்களுள் எவையேனும் நான்கனுக்கு ஒவ்வொன்றுக்கும் ஐந்து ளில் விடை தருக:*** **2=8**

1) இறைவன் எவ்வெப்பொருளாய் விளங்குவதாய்த் தாயுமானவர் குறிப்பிடுகிறா
2) ''நிரம்பா நீளிடை'' - எத்தகையது?
3) ஒருவன் ஆராய வேண்டிய நால்வகை வலிமைகள் யாவை?
4) பேரறிவாளன் திரு எத்தகையது?
5) எவன் விரைந்து கெடுவான்?
6) சிந்தாமணி - பெயர்க்காரணம் தருக.

**II. *பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஒவ்வொன்றுக்கும் பத்து வரிகளில் விடை எழுதுக:*** **3×4=12**

7) பாரதத் தாயின் பெருமைகளைப் பாரதியார் எவ்வாறு புகழ்ந்துரைத்துள்ளார்?
8) நீ. கந்தசாமிப்புலவர் அவர்கள் தமிழ்த்தாயின் பெருமையை எங்ஙனம் போற்றிப் புகழ்ந்துள்ளார்?
9) கழற்கால் பேகனைப் பரணர் எங்ஙனம் புகழ்ந்துரைத்துள்ளார்?
10) அகநானூற்றில் அமைந்த குறிப்புப் பொருளைத் தெளிவுபடுத்துக.
11) தலைமகற்குத் தோழி கூறியன யாவை?

**III. *பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஒவ்வொன்றுக்கும் பத்து வரிகளில் விடை எழுதுக:*** **3×4=12**

12) ஒருவன் நாவடக்கம் பேண வேண்டும் என்பதனைக் குறள் வழியே எடுத்துக்காட்டுக.
13) அடக்கமுடைமையின் சிறப்பினை வள்ளுவர் எங்ஙனம் விரித்துரைக்கிறார்
14) ஒப்புரவேயாயினும் அளவறிந்து செய்க என்று வள்ளுவர் உரைக்குமாறு யாங்ஙனம்?
15) சீவகன் யாழின் பால் கண்ட குற்றங்கள் யாவை?
16) தத்தை சீவகற்குத் தோல்வியுற்றதை விளக்குக.

**IV. *பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு இருபது வரிகளில் விடை எழுதுக:*** **1×8=8**

17) செலவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியவற்றை விளக்குக.
18) ''காலமறிதல்'' - வள்ளுவர் உரைப்பனவற்றை இருபது வரிகளில் எழுதுக.
19) சீவகன் காந்தருவ தத்தையை யாழ்ப்போட்டியில் வென்ற நிகழ்ச்சியைத் தொகுத்து எழுதுக.

**V. *பின்வரும் செய்யுளின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக:*** **4×1=4**

20) ''நன்மனை வதுவை யயரவிவள்
பின்னிருங் கூந்தன் மலரணிந்தோயே''
   1) இப்பாடல் அமைந்துள்ள நூல் எது?
   2) இவ்வடிகள் யாரிடம் கூறியது?
   3) இப்பாடலில் அமைந்த ''வதுவை'' - என்ற சொல்லின் பொருள் யாது?
   4) இப்பாடலின் ஆசிரியர் யார்?

21) ''இருங்கடற் பவளச் செவ்வாய் திறந்திவள் பாடினாளோ
நரம்பொடு வீணை நாவின் நடந்ததோ வென்று நைந்தார்'
   1) இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது?
   2) பவளச் செவ்வாய் திறந்து பாடியவர் யார்?
   3) ''என்று நைத்தார்'' - இதில் குறிப்பிடப்படுபவர் யார்?
   4) இச்செய்யுளின் ஆசிரியர் யார்?

**VI.** 22) ''அருள் பழுத்த .........'' - எனத் தொடங்கும் இறைவாழ்த்துப் பாடலை அடிபிறழாமல் எழுதி, அதன் பா-வகையையும் எழுதுக. **4+2=6**

23) ''உடைத்தம்'' எனத் தொடங்கும் குறளையும், ''நுழைந்து'' என முடியும் குறளையும் அடிபிறழாமல் எழுதுக. **2×2=4**

**VII.** 24) ***எவையேனும் இரண்டு சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக:*** **2×2=4**

அ) பொழிந்து    ஆ) இரங்கி    இ) செல்வார்
ஈ) ஒழிக    உ) அடைத்தனர்    ஊ) பணிகுவாம்

www.em.tnschools.co.in



25) **எவையேனும் மூன்று சொற்களுக்கு இலக்கணக்குறிப்பு தருக:** **3×2=6**

அ) நற்பயன் ஆ) வளைக்கை இ) ஓங்குமலை

ஈ) கருதுபவர் உ) சுமக்க ஊ) விழுப்பொருள்

26) **எவையேனும் இரண்டு சொற்களுக்குப் புணர்ச்சி விதி தருக:** **2×2=4**

அ) பொருளெல்லாம் ஆ) பண்ணொன்று இ) நுனிக்கொம்பர்

ஈ) தொன்மக்கள் உ) செறிவறிந்து ஊ) வாட்படை

27) **சான்று தந்து விளக்குக:** **1×4=4**

பாலைத் திணை **(அல்லது)** இயன்மொழித்துறை

28) ''பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்''

- *இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள அணியை விளக்குக.* **(அல்லது)** **1×4=4**

வேற்றுமையணி **(அல்லது)** உவமையணியை எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

**VIII. பொருத்துக:** **4×1=4**

| | திணை | - | ஆசிரியர் |
|---|---|---|---|
| 29) | மருதம் | | கபிலர் |
| 30) | நெய்தல் | - | பேயனார் |
| 31) | குறிஞ்சி | - | அம்மூவனார் |
| 32) | முல்லை | - | ஓரம்போகியார் |
| | | - | ஓதலாந்தையார் |

**IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **16×1=16**

33) தமிழ்மொழியின் உபநிடதம்

அ) கண்ணன் பாட்டு ஆ) இரங்கற்பா இ) தாயுமானவர் பாடல்கள்

34) தாயுமானவர் ஆற்றிய பணி

அ) அமைச்சர் ஆ) அரசுக்கணக்கர் இ) படைத்தலைவர்

35) பாரதியார் மொழிபெயர்த்த நூல்

அ) கீதை ஆ) இராமாயணம் இ) கீதாஞ்சலி

36) மணிமிடைப் பவளத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை

அ) 100 ஆ) 120 இ) 180

37) கான மஞ்ஞைக்குக் கலிங்கம் ஈந்தவன்

அ) பாரி ஆ) காரி இ) பேகன

38) புறநானூற்றில் உள்ள சில பாடல்களை மொழிபெயர்த்தவர்

அ) கால்டுவெல் ஆ) ஜி.யு. போப் இ) பெஸ்கி

39) ஐங்குறுநூற்றுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர்

அ) பெருந்தேவனார் ஆ) கபிலர் இ) பேயனார்

40) அகநானூற்றுக்கு வழங்கும் பெயர்

அ) குறுந்தொகை ஆ) நெடுந்தொகை இ) அகத்திணை

41) அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்கள்

அ) 38 ஆ) 133 இ) 35

42) குறட்பா - என்பது

அ) நாலடி வெண்பா ஆ) மூவடி வெண்பா அ) ஈரடி வெண்பா

43) திருக்குறளின் பெருமையை உணர்த்துவது

அ) பழமொழி நானூறு ஆ) திருவள்ளுவமாலை இ) நால்வர் நான்மணிமாலை

44) திருக்குறளில் அமைந்துள்ள இயல்கள்

அ) 4 ஆ) 9 இ) 30

45) வார்புரி நரம்பு வாங்கியவன்

அ) சீவகன் ஆ) நபுலன் இ) கட்டியங்காரன்

46) மணநூல் என்று அழைக்கப்படுவது

அ) சீறாப்புராணம் ஆ) சீவகசிந்தாமணி இ) மணிமேகலை

47) சீவகசிந்தாமணியில் பயின்றுவரும் பாவினம்

அ) கலிப்பா ஆ) வஞ்சிப்பா இ) விருத்தப்பா

48) திருத்தக்கத்தேவர் எழுதிய வேறுநூல்

அ) நரிவிருத்தம் ஆ) மனோன்மணீயம் இ) வளையாபதி

**X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக:** **2×2=4**

49) எல்லார்க்கும் நன்றாம் ............. அவருள்ளும்
செல்வர்க்கே ............. தகைத்து.

50) அளவறிந்து வாழாதான் ............. உளபோல
இல்லாகி ............. கெடும்.

------